# கேள்வி கேட்டல் உத்திமுறையைப் பயன்படுத்திக் கற்றல் பயணம்

**<u>கண்ணோட்டம்:</u>**

கேள்வி கேட்பதன்வழி நாம் பல தகவல்களைப் பெறுகிறோம். கேள்வி கேட்பவர் தகவல்களைப் பெறும்போதும் பதில் சொல்பவர் தகவல்களைக் கொடுக்கும்போதும் கற்றல் நடைபெறுகிறது. மேலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அதையொட்டி முடிவெடுக்கவும் கேள்வி கேட்கும் உத்தி அவசியமாகிறது. இருவரிடையே கருத்துப்பரிமாற்றம் தடையின்றி நிகழக் கேள்வி கேட்பதும் கேள்விகளுக்குப் பொருத்தமான பதிலளிப்பதும் இன்றியமையாதவையாகும்.

**<u>கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்**

✓ தாய்மொழி நடவடிக்கைகளின்போது கேள்விகள் கேட்டல்

**கேள்வி கேட்டல் உத்திமுறை**

1. **தூண்டுதல் கேள்விகள்**

பிள்ளைகளைப் பேசத் தூண்டவும், படித்தவற்றைப் புரிந்துகொள்ளவும், அவற்றைத் தம் முன்னறிவோடு தொடர்புபடுத்திப் பார்க்கவும்.

எது?

என்ன?

எப்போது?

எங்கே?

யார்?

2. **துருவுதல் கேள்விகள்**

பிள்ளைகள் ஒன்றைப்பற்றி விரிவாகவும் ஆழமாகவும் விளக்குவதற்கும், குறிப்பிட்ட கருத்தைக் காரணங்கள் கூறி நியாயப்படுத்துவதற்கும், கூடுதலான தகவல்களைக் கேட்டுப்பெறுவதற்கும் துருவுதல் வினாக்கள் பயன்படுகின்றன.

ஏன்?

எவ்வாறு?

எப்படி?

# கேள்வி வகைகள்

**நோக்கம்:**
தகவல் சேகரிக்கக்கூடிய திறன்களை வளர்க்கும் கேள்விகள்

**தகவலை நினைவு கூர்தல்**

இவர் பெயர் என்ன?
இவர் எப்போது வந்தார்?

**புரிந்துணர்தல்**

நீ இங்கே என்ன பார்க்கிறாய்?
இவன் என்ன செய்கிறான்?

**நோக்கம்:**
கருத்துகளை ஒழுங்குபடுத்தும் திறன்களை வளர்க்கும் கேள்விகள்

**நிரல்படுத்துதல்**
முதலில் என்ன நடந்தது?
அடுத்து என்ன நடந்தது?

**வகைப்படுத்துதல், ஒப்பிடுதல்**
இவற்றை எவ்வாறு வகைப்படுத்துதல் ?
இவற்றின் ஒற்றுமை, வேற்றுமை என்ன?

**நோக்கம்:**
பகுத்தாய்வுத் திறன்களை வளர்க்கும் கேள்விகள்

**காரணகாரியத் தொடர்பைப் பகுத்தாய்தல்**
உனக்கு எப்படித் தெரியும்?
ஏன் இப்படி இருக்கிறது என்று நினைக்கிறாய்?
ஏன் இவ்வாறு நடந்தது?

**நோக்கம்:**
கருத்துகளைக் கூறும் திறன்களை வளர்க்கும் கேள்விகள்

**ஊகித்தல்**

அடுத்து என்ன நடந்திருக்கும்?

இப்படிச் செய்ந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

**மாற்றுவழிகள் கூறு**

இதை வேறு எப்படிச் செய்யலாம்?

புதிதாக என்ன செய்யலாம்?

**நோக்கம்:**
அறிவாற்றல்சார் திறன்களை வளர்க்கும் கேள்விகள்

**சிந்திக்கும் முறைகளை உணர்தல்**

இது எப்படி உங்களுக்குத் தெரியும்?

இந்த முடிவுக்கு எப்படி வந்தீர்கள்?

**சிந்தனைகளை ஒப்பிடுதல்**
நீங்கள் கூறிய கருத்துக்கும் உங்கள் நண்பர் கூறிய கருத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?
எது சரி? எது தவறு?

**உணர்வுகளை வெளிப்படுத்துதல், சொந்த அனுபவத்துடன் தொடர்புபடுத்துதல**

இவற்றில் உனக்கு எது பிடிக்கும்?

ஏன் இது உனக்குப் பிடிக்கும்?

இது உனக்கு என்ன உணர்வைக் கொடுக்கிறது? (எ.டு: மகிழ்ச்சி / கவலை)

**கேள்வி கேட்பதற்கும், கேள்விகளுக்குரிய பதில்களைச் சிந்திப்பதற்கும் போதுமான நேரம் வழங்குதல் வேண்டும்.**

